# March 30, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஈரானுக்கு எதிரானபோரையும்,அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் செயல்பாடுகளையும் கண்டித்து அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

(i) 'நோ கிங்ஸ்' என்ற பெயரில் அமெரிக்காவின் பல பகுதிகளில் பிரம்மாண்ட பேரணி, ஆர்ப்பாட்டம் ஞாயிற்றுக்கிழமை (மார்ச்29) நடைபெற்றது. மின்னசோட்டாவில் நடைபெற்ற பேரணி, ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அப்போது அகதிகள் தொடர்பான விதிகளை தீவிரமாக அமல்படுத்தி வரும் டிரம்ப்புக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

2. ஈரான் மண்ணில் அமெரிக்க தரைப்படை களமிறங்கினால் கடும் பதிலடி தரப்படும் என்று அந்நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

(i) ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த ஏதுவாக சண்டை நிறுத்தத்தை சுமார் 2 வாரங்களுக்கு அமெரிக்கா அறிவித்தது. எனினும், மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கு அமெரிக்கா கூடுதலாக சுமார் 10,000 வீரர்களை அனுப்பி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ii) இந்த வீரர்கள் சவூதி அரேபியா அல்லது ஐக்கிய அரபு அமீரகம் நாட்டு ராணுவ வீரர்களுடன் சேர்ந்து எந்நேரமும், ஈரானின் கச்சா எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதிக்கு முக்கியத் தளமாகத் திகழும் கார்க் தீவுக்குள் நுழைந்து அந்தப் பகுதியைப் கைப்பற்றலாம் எனவும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

3. ஸ்பெயினில் நடைபெறும் சர்வதேச பாரா பாட்மின்டன் முதல் நிலையில், பாராலிம்பிக் சாம்பியனான இந்தியாவின் பிரமோத் பகத் 1 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்றார்.

4. 6 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், தொழில்முறை குத்துச் சண்டைக்கு மாறுவதற்கு பரிசீலித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

5. ஃபார்முலா ஒன் (எஃப்1) கார் பந்தயத்தின் 3-ஆவது ரேஸான ஜப்பான் கிராண்ட் ப்ரீயில், இத்தாலி வீரரும், மெர்சிடஸ் டிரைவருமான கிமி ஆன்டனெலி வெற்றி பெற்றார்.

(i) இரு வாரங்களுக்கு முன் சீன கிராண்ட் பிரீயில் தனது கேரியரின் முதல் எஃப்1 வெற்றியைப் பதிவு செய்திருந்த 19 வயது ஆன்டனெலி, தற்போது தொடர்ந்து 2-ஆவது வெற்றியைப் பதிவு செய்து அசத்தியிருக்கிறார்.

6. மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், பெலாரஸின் அரினா சபலென்கா சாம்பியன் பட்டம் வென்றார்.

(i) நடப்பு சாம்பியனாக களம் கண்ட அவர், இந்தப் போட்டிக்கு முந்தையதாக நடைபெற்ற இண்டியன் வெல்ஸ் ஓபனிலும் வாகை சூடியிருந்ததால், 'சன்ஷைன்டபுள்' வென்ற 5-ஆவது வீராங்கனையாக பெருமை பெற்றார்.

(ii) அமெரிக்காவில் நடைபெற்ற 1,000 புள்ளிகள் கொண்ட இந்த மியாமி ஓபன் இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீராங்கனையான சபலென்கா 4-ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்கா வின் கோகோ கௌஃபை வீழ்த்தினார்.

(iii) டென்னிஸ் காலண்டரில், 1,000 புள்ளிகள் கொண்ட முதல் இரு போட்டிகளாக அடுத்தடுத்து நடைபெறும் இண்டியன் வெல்ஸ் ஓபன், மியாமி ஓபன் ஆகியவற்றில் கோப்பையைக் கைப்பற்றி, 'சன்ஷைன் டபுள்' வென்ற 5-ஆவது வீராங்கனை என்ற பெருமையை சபலென்கா பெற்றுள்ளார். இதற்கு முன் ஜெர்மனியின் ஸ்டெஃபி கிராஃப் (1994, 1996), பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸ் (2005), பெலாரஸின் விக்டோரியா அஸரென்கா (2016), போலந்தின் இகா ஸ்வியாடெக் (2022) ஆகியோர் இந்தப் பெருமையைப் பெற்றுள்ளனர்.

(iv) மியாமி ஓபன் போட்டியில் கடந்த 5 ஆண்டுகளில் சாம்பியன் கோப்பையைத் தக்கவைத்த முதல்

வீராங்கனையாக சபலென்கா பெருமை பெற்றார். இதற்கு முன் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி 2019 மற்றும் 2021-இல் அடுத்தடுத்து வாகை சூடியிருந்தார்.

7. பெட்ரோல், டீசல்என 38,000 மெட்ரிக்டன் எரிபொருள் வழங்கி உதவி செய்த பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை பிரதமர் அநுர குமார திசாநாயக நன்றி தெரிவித்தார்.

(i) ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான மோதலால் மேற்கு ஆசியாவில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால் ஹோர்முஸ் நீரிணை வழியாக கச்சா எண்ணெய் ஏற்றிச் செல்லும் சரக்குக் கப்பல்கள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. இதனால் உலகின் பல்வேறு நாடுகளில் எரிபொருள் விநியோகம் தடைபட்டுள்ளது.

(ii) இதன் விளைவாக இலங்கையில் பெட்ரோல், டீசல் விலையை 25 சதவீதம் அந்நாட்டு அரசு உயர்த்தியது. அதன்படி ஒரு லிட்டர் பெட்ரோல் விலை இலங்கை ரூபாய் மதிப்பில் ரூ.317-இல் இருந்து ரூ.398-ஆக அதிகரிக்கப்பட்டது. ஒரு லிட்டர் டீசல் விலை இலங்கை ரூபாய் மதிப்பில் ரூ.79 உயர்ந்து ரூ.382-ஆக அதிகரித்துள்ளது. மண் ணெண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.195-இல் இருந்து ரூ.255-ஆக உயர்த்தப்பட்டது.

(iii) இந்நிலையில், இலங்கைக்கு உதவும் விதமாக 20,000 மெட்ரிக் டன் டீசல் மற்றும் 18,000 மெட்ரிக் டன் பெட்ரோலை இந்தியா சனிக்கிழமை அனுப்பிவைத்தது. அவசரகால உதவியாக இதை இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐஓசி) இலங்கை எண்ணெய் நிறுவனத்துக்கு (எல்ஐ ஓசி) வழங்கியுள்ளது.

8. மகாவீர் ஜெயந்தியின் பின்னணியில் சமண சமயத்தின் தோற்றம், வரலாறு மற்றும் அடிப்படைத் தத்துவங்கள்.

(i) அடிப்படை மற்றும் தொன்மையான வரலாறு

- சமண சமயம் "அகிம்சை பரமோ தர்மம்" (அகிம்சையே மிகச்சிறந்த கடமை) என்ற கோட்பாட்டில் வேரூன்றியுள்ளது; இது ஆன்மீக ஒற்றுமைக்கும் நன்னடத்தைக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.
- முதல் தீர்த்தங்கரர்: இக்கோட்பாடுகள் முதன்முதலில் ரிஷபதேவரால் (ஆதிநாதர் அல்லது ஆதி பகவான் என்றும் அழைக்கப்படுபவர்) பரப்பப்பட்டன.
- ரிஷபதேவரைத் தொடர்ந்து, பல்வேறு காலகட்டங்களில் சமண நம்பிக்கைகளைப் பரப்பிய 23 பிற தீர்த்தங்கரர்கள் (முழுமையான ஞானம் பெற்றவர்கள்) தோன்றினர்.

(ii) தென் இந்தியா மற்றும் தமிழ்நாட்டிற்குப் பரவுதல்

- மௌரியப் பேரரசுக் காலத்தில், சமணத் தலைவரான பத்ரபாகு முனிவர் மகத நாட்டில் 12 ஆண்டுகள் நீடிக்கும் ஒரு பெரும் பஞ்சத்தை முன்னறிவித்தார்.
- அப்பஞ்சத்திலிருந்து தப்பிப்பதற்காக, பத்ரபாகு முனிவர், மௌரியப் பேரரசர் சந்திரகுப்த மௌரியர் (இவர் தனது அரியணையைத் துறந்தவர்) மற்றும் 12,000 துறவிகளுடன் தெற்கு நோக்கிச் சென்று சிரவணபெலகோலாவை (மைசூர்) அடைந்தார்.
- இத்துறவிகள் நான்கு குழுக்களாகப் பிரிந்து (நந்தி கணம், சேனா கணம், சிம்ம கணம் மற்றும் தேவ கணம்) தமிழ்நாடு முழுவதும் பரவினர்; இவர்கள் தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தனர்.

(iii) வர்த்தமான மகாவீரரின் வாழ்க்கை

- பிறப்பு (கி.மு. 599): 24-வது தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர், குண்டல்பூரில் மன்னர் சித்தார்த்தர் மற்றும் அரசி பிரியகாரிணி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.
- ஞானோதயம் மற்றும் வீரம்: சிறுவயதிலேயே அவர் உயர்ந்த அளவிலான ஆன்மீக அறிவைப் பெற்றிருந்தார்; தனது வீரத்திற்காகவே அவர் "மகாவீரர்" (மாபெரும் வீரன்) என்று அழைக்கப்பட்டார்.
- துறவு (30-வது வயதில்): அகிம்சை வழியைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு, அவர் தனது நாட்டையும் அரச வாழ்க்கையையும் துறந்து ஒரு துறவியானார்.

- கடவுள் குறித்த போதனை: ஆன்மாவிற்கு அப்பாற்பட்டுத் தனித்ததொரு கடவுள் இல்லை என்று அவர் போதித்தார்; மாறாக, தீர்த்தங்கரர்கள் மற்றும் சித்தர்கள் போன்ற ஞானம் பெற்றவர்களை வழிபடுவதன் மூலமே மனத்தூய்மையையும் வீடுபேற்றையும் (முக்தியையும்) அடைய முடியும் என்று அவர் கூறினார்.
- நிர்வாணம் (கி.மு. 527): தனது 72-வது வயதில், பாவாபுரியில் அவர் பரிநிர்வாணத்தை (முக்தியை) அடைந்து, தனது பூவுலகப் பயணத்தை நிறைவு செய்தார்.

(iv) முக்கியக் கோட்பாடுகளும் போதனைகளும்

மகாவீரர் தனது பின்பற்றுபவர்களுக்காக வகுத்தளித்த குறிப்பிட்ட அறநெறிகள்:

- ஐந்து அறவுறுதிகள் (அணுவிரதங்கள்):

1. அகிம்சை: அனைத்து உயிரினங்களிடத்தும் வன்முறையின்றி இருத்தல்.

2. சத்யம்: வாய்மையைக் கடைப்பிடித்தல்.

3. அசௌரியம்: கள்ளாமை (தானாக வழங்கப்படாத பொருட்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதும் இதில் அடங்கும்).

4. பிரம்மச்சரியம்: கற்புடைமை மற்றும் திருமண உறவின் எல்லைகளை மதித்தல்.

5. அபரிகிரகம்: பற்றின்மை (ஒருவரின் தேவைக்கு அதிகமான செல்வத்தைச் சேர்த்து வைப்பதைத் தவிர்த்தல்).

- மூன்று ரத்தினங்கள் (ரத்னத்ரயம்):

1. நற்காட்சி (சம்யக் தர்சனம்): ஆன்மா மற்றும் பிரபஞ்சம் சார்ந்த ஒன்பது உண்மைகளைப் புரிந்துகொள்ளுதல்.

2. நல்ஞானம் (சம்யக் ஞானம்): ஆன்மீக நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள உண்மைகளை ஏற்றுக்கொண்டு கடைப்பிடித்தல்.

3. நன்னடத்தை (சம்யக் சரித்திரம்): அந்த உண்மைகளுக்கு இணங்க, அன்றாட வாழ்க்கையை மிகக் கண்டிப்பாக அமைத்துக்கொள்ளுதல்.

- சமூகப் பொறுப்பு: சமூக நலனைப் பேணிக்காக்கும் பொருட்டு, நான்கு வகையான தானங்களை (அன்னதானம், அபயதானம், ஔஷததானம் மற்றும் வித்யா தானம்) செய்யுமாறு அவர் தனது பின்பற்றுபவர்களை வலியுறுத்தினார்.

(v) மகாவீர் ஜெயந்தியைச் சிறப்பிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று, அனைத்து டாஸ்மாக் (TASMAC) மதுபானக் கடைகளுக்கும் மற்றும் மதுக்கூடங்களுக்கும் விடுமுறை நாளாகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது